மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. ராஜேந்திரன், அவர்கள்.

திரு. வி.ஜி. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி எனக்கும் தெரியும். நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக 6 மாதங்களுக்கு முன் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சென்று பேசினோம். இப்போது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டுவருகிறேன். இருப்பினும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. நிச்சயமாக, கூடியவிரைவிலே துணை மின் நிலையத்தின் திறப்பு விழாவை எதிர்ப்பார்க்கிறோம். நன்றி.

(ஆ) ஒட்டன்சத்திரம் தொகுதி, அரசு கலைக் கல்லூரி தொடங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

***திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி துவங்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்பான விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அறிக்கை

தமிழ்நாட்டிலுள்ள மாணவர்கள் உயர் கல்வி பயில, தேவையின் அடிப்படையில், தமிழக அரசால் 2011–2012 ஆம் கல்வியாண்டில், 11 பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும்

அறிவியல் கல்லூரிகளும், 2012–2013 ஆம் கல்வியாண்டில் 11 பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 2013–2014 ஆம் கல்வியாண்டில் 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 2 பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 2014–2015 ஆம் கல்வியாண்டில், 2 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 2015–2016 ஆம் கல்வியாண்டில் 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 2016–2017 ஆம் கல்வியாண்டில் 2 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 2017–2018 ஆம் கல்வியாண்டில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் துவங்கப்பட்டுள்ளன. இக்கல்லூரிகள் தமிழ்நாட்டிலுள்ள மாணவர்களின் உயர் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றன.

2. தற்பொழுது, ஒட்டன்சத்திரம் பகுதி அமைந்துள்ள திண்டுக்கல் மாவட்டத்தில், 2 அரசு கல்லூரிகள், 3 அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் 15 சுயநிதிக் கல்லூரிகள் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்திலுள்ள அரசு கல்லூரிகளில் பின்வருமாறு பாடப் பிரிவுகள் துவங்கப்பட்டுள்ளன:

வ. எண்	கல்லூரி	பாடப் பிரிவு		
		இளநிலை	முதுநிலை	எம்.ஃபில்
1.	அரசு மகளிர் கலைக் கல்லூரி, நிலக்கோட்டை	1. தமிழ் 2. ஆங்கிலம் 3. பொருளியல் 4. கணிதம் 5. இயற்பியல் 6. வேதியியல் 7. மனையியல் 8. புவியியல் 9. கணினி அறிவியல் 10. வணிகவியல் 11. தொழில் நிருவாகவியல்	1. தமிழ் 2 கணினி அறிவியல்	

2017 ஜூலை 19] [திரு. கே.பி. அன்பழகன்]

வ. எண்	கல்லூரி	பாடப் பிரிவு		
		இளநிலை	முதுநிலை	எம்.ஃபில்
2	எம்.வி.எம். அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்	1. தமிழ் 2. ஆங்கிலம் 3. வரலாறு 4. பொருளியல் 5. கணிதம் 6. இயற்பியல் 7. வேதியியல் 8. தாவர உயிர் தொழில்நுட்பவியல் 9. விலங்கியல் 10. கணினி அறிவியல் 11. வணிகவியல் 12. புவியியல்	1. தமிழ் 2. ஆங்கிலம் 3. வரலாறு 4. பொருளியல் 5. கணிதம் 6. வேதியியல் 7. புவியியல் 8. கணினி அறிவியல் 9.வணிகவியல்	1. தமிழ் 2. ஆங்கிலம் 3. வரலாறு 4. பொருளியல் 5. புவியியல் 6. கணினி அறிவியல்

3. அரசு கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு இளநிலை மற்றும் முதுநிலை பாடப் பிரிவுகளுக்குக் கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அரசு உதவிபெறும் கல்லூரியில் பயிலும் இளநிலை பாடப் பிரிவு மாணவர்களுக்குக் கல்விக் கட்டண விலக்கும், முதுநிலை பாடப் பிரிவு மாணவர்களுக்கு மட்டும் கல்விக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சுயநிதிக் கல்லூரிகளைப் பொறுத்தவரை அனைத்துப் பாடங்களுக்கும் கல்விக் கட்டணம் அந்தந்த கல்லூரிகளால் வசூலிக்கப்படுகிறது.

இம்மாவட்டத்திலுள்ள அரசு கல்லூரிகளில் உள்ள மாணவர் சேர்க்கை விவரம் பின்வருமாறு:—

வ. எண்	கல்லூரிகள்	வருடம்	அனுமதிக்கப் பட்ட மாணவர்கள் சேர்க்கை		மாணவர்கள் சேர்க்கை		மொத்தம்
			மாணவர்	மாணவியர்	மாணவர்	மாணவியர்	
1.	அரசு மகளிர் கலைக் கல்லூரி, நிலக்கோட்டை	2016–2017	–	738	–	721	721
2.	எம்.வி.எம். அரசினர் மகளிர் கலைக் கல்லூரி, திண்டுக்கல்	2016–2017	–	1238	–	1090	1090

[திரு. கே.பி. அன்பழகன்] [2017 ஜூலை 19

4. ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவதற்கு, பணியாளருக்கான சம்பளம் ரூ.92.29 இலட்சம் மற்றும் அலுவலகச் செலவினம் ரூ.50,000 ஆகியவை தொடரும் செலவினம். மரத்தளவாடங்கள், புத்தகங்கள், இயந்திரங்கள், கருவிகள் மற்றும் கணினிகள் வாங்குவதற்கான தொடராச் செலவினம் ரூ.30,00,000 மற்றும் கட்டடம் கட்டுவதற்கான செலவினம் ரூ.798 இலட்சம் ஆக மொத்தம் ரூ.920.79 இலட்சம் கூடுதல் செலவினம் அரசுக்கு ஏற்படும். ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்குவதற்கு 5 ஏக்கர் முதல் 10 ஏக்கர் வரை நிலம் தேவைப்படுகிறது.

5. புதிய அரசு கல்லூரி துவக்கக் கோரும் ஒட்டன்சத்திரம் தொகுதி, ஏற்கெனவே அரசு மகளிர் கலைக் கல்லூரி உள்ள திண்டுக்கல்லிலிருந்து 28 கிலோ மீட்டர் தொலைவிலும், நிலக்கோட்டையிலிருந்து 43 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்துள்ளது. மேலும், 30 கிலோ மீட்டர் தொலைவிற்குள்ளுள்ள கல்லூரிக்குச் செல்ல "இலவசப் பேருந்து அட்டை" அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

6. திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கை, ஒப்பளிக்கப்பட்ட மாணவர் சேர்க்கை இடங்களுக்கும் குறைவாகவே உள்ளது. மேலும், ஒட்டன்சத்திரம் அருகாமையில் (சாந்திபுரம் (ம) பலக்கனூத்து ஆகிய இடங்களில்) இரண்டு சுயநிதிக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் இத்தொகுதி மாணவ/மாணவியரின் உயர் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றன. இருப்பினும், ஒட்டன்சத்திரம் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி தொடங்குவதற்கான சாத்தியக்கூறுகள் நடைமுறையில் உள்ள விதிகளின்படி ஆய்வு செய்யப்பட்டு நிதி நிலைமைக்கேற்ப உரிய முடிவு மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். ஒட்டன்சத்திரம் தொகுதியைப் பொறுத்தவரையில், அரசு கல்லூரியோ அல்லது அரசு உதவிபெறும் கல்லூரியோ எதுவுமே இல்லை. அதுமட்டுமல்லாமல், அங்கே 17–க்கும் மேற்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள்*

இருக்கின்றன. 15–க்கும் மேற்பட்ட மெட்ரிக் பள்ளிகளும் இருக்கின்றன. ஆண்டுதோறும் சுமார் 20,000–க்கும் மேற்பட்ட மாணவர்கள் மேல்கல்விக்காக கல்லூரியில் சேர வேண்டிய சூழ்நிலையுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பொறியியல் கல்லூரிகளில் சேர்வதற்கு மாணவர்கள் விருப்பம் இல்லாமல் அரசு கலைக் கல்லூரிகளில் சேர்வதற்கு விருப்பம் தெரிவித்து, உயர் கல்வி பயில விரும்புகிறார்கள். எங்களுக்கு இருக்கும் சிரமம் என்னவென்றால், பழநி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலின் கட்டுப்பாட்டிலுள்ள ஆண்கள்/பெண்கள் கல்லூரியில்தான் அந்த மாணவ, மாணவியர் சேர வேண்டும். எனது தொகுதியைப் பொறுத்தவரையில், வேடசந்தூரிலிருந்து மடத்துக்குளம் வரை சுமார் 70 கிலோ மீட்டர் தொலைவு இருக்கிறது. நீங்கள் திண்டுக்கல்லிலிருந்து ஒட்டன்சத்திரம் வரை 28 கிலோ மீட்டர் தூரம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், தொலைதூரத்தைக் கணக்கிட்டால், 70 கிலோ மீட்டர் அகலமும் நீளமும் வருகிறது. ஒட்டன்சத்திரம் தொகுதி, 77 ஊராட்சிகள், ஒரு பேரூராட்சி மற்றும் ஒரு நகராட்சியைக் கொண்டது. அங்கு படிக்கின்றதாழ்த்தப்பட்ட,பிற்படுத்தப்பட்ட,மிகப்பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் இங்கே சேர முடியவில்லையென்றால், மதுரை, கோயம்புத்தூர் போன்ற பல்வேறு ஊர்களுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

முற்பகல் 11–10

ஒட்டன்சத்திரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள தாராபுரம், மடத்துக்குளம் மற்றும் பழநி ஆகிய 4 தொகுதிகளிலுமே அரசுக் கலைக் கல்லூரி இல்லை. எல்லோரும் கல்லூரிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், பல்வேறு உறுப்புக் கல்லூரிகள் தொடங்கும்போது, ஒட்டன்சத்திரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள மாணவர்களின் நலன் கருதி, வருகின்ற கல்வியாண்டில் ஒட்டன்சத்திரத்தில் ஓர் அரசு கலைக் கல்லூரி அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரிமை அளிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒட்டன்சத்திரம் தொகுதியில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்று அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். கடந்த ஆண்டு அரசு கல்லூரிகளில் மாணவர்களுடைய சேர்க்கை எண்ணிக்கையிலே சேர்ந்த மாணவர்கள் எண்ணிக்கை விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. அதிலே, 165 இடங்கள் இன்றைக்கு காலியாகவுள்ளன. அதைபோல, 2016–2017 ஆம் ஆண்டில், அரசு உதவி பெறும் கல்லூரிகளில் 126 இடங்கள் காலியாகவுள்ளன. உறுப்புக் கல்லூரிகளில் 33 இடங்கள் காலியாகவுள்ளன. அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை, அங்கிருக்கக்கூடிய 15 சுயநிதிக் கல்லூரிகளில் 978 இடங்கள் காலியாகவுள்ளன. ஒட்டன்சத்திரத்திலிருந்து கிட்டத்தட்ட 28 கிலோ மீட்டர், 43 கிலோ மீட்டர் மற்றும் 25 கிலோ மீட்டர் தொலைவுகளில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அமைந்துள்ளன. 27 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பழநியிலும், 31 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திண்டுக்கல்லிலும் கல்லூரிகள் அமைந்துள்ளன. ஆகவே, ஒட்டன்சத்திரத்தை மையமாகக் கொண்டு இரண்டு அரசு கலைக் கல்லூரிகள், ஒரு பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரி, 3 அரசு நிதி உதவிபெறும் கல்லூரிகள் என்று 6 கல்லூரிகள் ஒட்டன்சத்திரம் தொகுதியைச் சுற்றி அமைந்துள்ளன. அந்தத் தொகுதியில் இருக்கக்கூடிய மாணவர்களின் நலன் கருதி, ஒட்டன்சத்திரத்தை மையமாகக் கொண்டு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் கடந்த காலங்களிலிருந்தே இதே கோரிக்கையை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார். ஆகவே, எதிர்காலத்தில் அந்தப் பகுதியிலுள்ள மாணவர்களின் சேர்க்கை சதவிகிதத்தைக் கணக்கிட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்தை நான் வரவேற்கின்றேன். பழநியிலிருந்து சுமார் 20 கிலோ

2017 ஜூலை 19] [திரு. அர. சக்கரபாணி]

மீட்டர் தொலைவில், பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலுக்குச் சொந்தமான, 250 ஏக்கர் நிலம் கொத்தையம் என்ற இடத்தில் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஆண்டுதோறும் பழநி திருக்கோயிலுக்குச் சுமார் 400 கோடி ரூபாய் வருமானம் வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையில் இருப்பதால், பழநி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலின் சார்பாக ஒரு பல்கலைக்கழகம் ஆரம்பிக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஆண்கள் கல்லூரி மற்றும் பெண்கள் கல்லூரி, உறுப்புக் கல்லூரிகள் மற்றும் வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஒன்றும், மருத்துவக் கல்லூரி ஒன்றும் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அங்கே, எந்த பல்லைக்கழகங்களுமே இல்லை. படிக்கின்ற மாணவர்களில் இன்றைக்கு அதிகமான மாணவர்கள் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சேர வேண்டுமென்றுதான் நினைக்கிறார்கள். அதனால், அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயிலின் சார்பாக கல்லூரி ஒன்று அமைப்பதற்கு இடமும் இருக்கிறது. அதற்குரிய நிதியும் இருக்கிறது. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ஆகிய 3 பேரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, அங்கே வேளாண்மைக் கல்லூரி ஒன்றும், மருத்துவக் கல்லூரி ஒன்றும், ஆண்கள் கலைக் கல்லூரி, பெண்கள் கலைக் கல்லூரியும் மற்றும் ஒரு பல்கலைக்கழகமும் அமைத்துக் கொடுத்தால் அங்கேயிருக்கிற நான்கு மற்றும் ஐந்து தொகுதிகளைச் சார்ந்த மாணவர்களும், பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மாணவர்களும் படிப்பதற்கு ஏதுவாக இருக்கும். அதுகுறித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து, வருகின்ற காலங்களில் அமைத்துக் கொடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் பல்கலைக்கழகம் அமைத்துத்தர வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்து உயர் கல்வியில் பல்வேறு சாதனைகளைப் படைத்தவர்

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள். தமிழகத்தின் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் உயர் கல்வியில் பல்வேறு மாற்றங்களை உருவாக்கித் தந்து, பல்வேறு நிகழ்வுகளைச் செயல்படுத்தி கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து, பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு மதுவிலக்குச் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.